SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

Web site - sond.lk

# மாதாந்த அறிக்கை

தை, 2012.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.



# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## Inclusive Economic Development PROJECT - ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தித்திட்டம்

### மூலிகை தோட்டம் அமைத்தல் தொடர்பான பயிற்சி

IED திட்டத்தில் வீட்டு பண்ணை அமைத்தல் செயற்பாட்டின் கீழ் மூலிகைகளின் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகளுக்கான பயிற்சி சித்த மருத்துவத்துறை சிரேஸ்ர விரிவுரையாளர் திருமதி சத்தியசீலன் அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் தற்போது அதிகளவு தேவைப்படும் மூலிகைகளும் அதன் செய்கை முறைகள் மற்றும் பிரயோகம் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 07 பெண்கள் உட்பட 18 பேர் கலந்து கொண்டனர்.





### சேதன விவசாய ஊக்குவிப்பு பயிற்சி

IED திட்டத்தில் சேதன விவசாய ஊக்குவிப்பு செயற்பாட்டின் கீழ் சேதன விவசாயத்தினை மேம்படுத்தலும் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் CIGs தலைவர்களுக்கான பயிற்சி 20.01.2012 அன்று கலாநிதி றிச்சாட் தொரின்டொன் சிமித் அவர்களால் வழங்கப்பட்டது .இதில் 06 பெண்கள் உட்பட 38 பேர் கலந்து கொண்டனர். இப் பயிற்சியில் யாழ் பல்கலைக்கழக விவசாயத்துறை பேராசிரியர் கலாநிதி மிகுந்தன் மற்றும் விவசாயத்துறை மாணவர்களும் கலந்து கொண்டனர்.





SOND

# Community consultation
# மக்கள் பங்கேற்புடனான சமூக கலந்துரையாடல்

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட 47 கிராம சேவையாளர் பிரிவுகளில் எதிர்கால திட்டமிடல் மற்றும் பாதீடு தயாரிப்பதற்கான மக்கள் பங்கேற்புடனான பிரச்சினை இனங்காணும் கலந்துரையாடல் கூட்டம் 4 கிராம சேவையாளர் பிரிவுகளில் நடைபெற்றுள்ளது இதில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டு தங்கள் தேவைகளினை வெளிப்படுத்தினார்கள்.





## The activities of volunteers - தொண்டர்களின் செயற்பாடுகள்

### புத்தகக் கண்காட்சி

யா/இந்து ஆரம்பப்பாடசாலை, கலட்டி மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் மற்றும் வைத்தீஸ்வராக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது இதில் சுமார் 1350 மாணவர்களும் 120 ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள். இக்கண்காட்சியின் மூலம் பல மாணவர்கள் எமது நூலகத்தில் இணைந்துள்ளனர்.









# மாதாந்த ஆய்வரங்கம்

மாறிவரும் இன்றைய சூழலில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் எனும் கருப்பொருளில் ஓய்வு பெற்ற வட மாகாண சபை பிரதம செயலாளர் திரு.S.ரங்கராஜா அவர்கள் ஆய்வுரை நிகழ்தினார். இவ் ஆய்வரங்கில் பலர் கலந்து பயன் பெற்றார்கள்.









## Non State Actors in Development Project – அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

07.01.2012- 20 தெரிவு செய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புகளுக்கான தலைமைத்துவப்பயிற்சி SOND அலுவலகத்தில் 10.00 மணி தொடக்கம் 03.30 மணிவரை நடைபெற்றது. இதில் 51 பேர் பங்குபற்றினா்.



10.01.2012 செல்வநாயகபுரம் காணி பிரச்சனை தொடா்பாக காணி உத்தியோகத்தருக்கும் மக்கள் மன்ற உறுப்பினருக்குமான கலந்துரையாடல் செல்வா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது .இக்கலந்துரையாடலில் 76 பேர் பங்குபற்றினா்

16.01.2012யாழ்பாணம்,நல்லூா்,சங்கானை,சண்டிலிப்பாய் கோப்பாய் ஆகிய பிரதேச மக்கள் மன்ற உறுப்பினருக்குமான மீளாய்வு கலந்துரையாடல் SOND அலுவலகத்தில் நடைபெற்றது இதில் 32பேர் கலந்துகொண்டனா்.

சுழிபுரம் பிரதேச சபையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினருகளுக்கும் சங்கானை மக்கள் மன்ற உறுப்பினருக்கான கலந்துரையாடல் 27.01.2012 அன்று நடைபெற்றது இதில் 23 பேர் பங்குபற்றினர்







17.01.2012 அன்று அரசு சாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் SOND நிறுவன பணியாளருக்கும் கிறிஸ்தவ உதவி நிறுவன பணியாளருக்குமான திட்ட மீளாய்வு கலந்துரையாடல் SOND நிறுவனத்தில் நடைபெற்றது.





# SOND அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## ஆங்கில வகுப்பு

2011 ம் ஆண்டு சாதாரணதர பரீட்சையினை முடித்துவிட்டு பரீட்சை முடிவிற்காக காத்திருக்கும் இளையோரிக்கான ஆங்கில வகுப்பு VSO தொண்டர்களால் எம்முடைய அலுவலக்தில் நடை பெற்று வருகின்றது இதில் 22 ஆங்கிலக் கல்வியினைத் தொடர்கின்றார்கள்.





## ஆசிரியருக்கான மாதாந்த கலந்துரையாடல்.

இம் மாதம் அம்பாரை மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடலானது **2012.01.13** ஆம் திகதி அன்று மாலை **02.30** மணிக்கு **SOND** அமைப்பின் பணியாளரான தி.ஜெனிற்றா அவர்களின் தலைமையில் **SOND** பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் **11** முன்பள்ளியைச் சேர்ந்த 21 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

- ✓ இனி வரும் காலங்களில் ஆசிரியர் மாதாந்தக் கலந்துரையாடலானது ஒவ்வொரு மாதமும் 28 ஆம் திகதி அன்று பாடசாலை நாட்களில் மாலை 02.30 மணிக்கும் பாடசாலை விடுமுறை காலங்களில் காலை 10.00 மணிக்கும் நடைபெறும்.
- ✓ வருடத்திற்கு ஒரு முறை சிறுவர் தினத்தினை முன்னிட்டு ஒவ்வொரு பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஒரு சில மாணவர்களை எமது அலுவலகத்திற்கு வரவளைத்து மாணவர்களுக்கிடையே நிகழ்ச்சிகள் செய்வதாகவும். மற்றும் இந்நிகழ்ச்சி ஒவ்வொரு வருடமும் 10 மாதம் 1 தொடக்கம் 14 ஆம் திகதிக்குள் ஏதாவது ஒரு திகதியினை தீர்மானித்து நிகழ்ச்சிகள் செய்வதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.இந்த தீர்மானத்திற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒத்துழைப்பு தருவதாக கூறப்பட்டது.





# சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 20ஆண், 35 பெண் உள்ளடங்கலாக 55 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்

**நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.**

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிற்றா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் கலந்துரையாடலும்,திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்படுகின்றது. இம் மாதம்5 கலந்துரையாடல் நடை பெற்றுள்ளது இதில் 135 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

**நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.**

1. கலந்துரையாடலின் போது நடைபெறவிருக்கும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சி பற்றி சிறுவர்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.
2. நிதி சேகரிப்பு அட்டையினால் பெறப்படும் பணம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.
3. கழக சிறுவர்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் நாற்றுமேடை ஒன்று எமது அமைப்பில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதற்கு அனைத்து சிறுவர்களும் உங்களது வீட்டிலிருந்து பயிர் விதைகள் கொண்டு வரவேண்டும் எனவும் எதிர் வரும் 05ஆம் திகதி இவ் நாற்றுமேடையினை உருவாக்க வேண்டும் என கூறப்பட்டது.
4. ஓய்வான நேரங்களில் மருந்துப்பை தயாரிப்பது.
5. கழக சிறுவர்களாகிய நீங்கள் உங்களது பாடசாலை காலை இறைவணக்கத்தின் முடிவின் போது ஏதாவது ஒரு பொன்பொழி ஏனைய மாணவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும்,நீங்கள் வழங்கவிருக்கு பொன்மொழியின் தலைப்பினை எமக்கு வழங்க வேண்டும் என கூறப்பட்டது.
6. சிரமதான,நடமாடும் நூலக சேவையின் போது உரிய சிறுவர்கள் எமது அமைப்பிற்கு வருகை தந்து இந்நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என கூறப்பட்டது.
7. கலந்துரையாடல் முடிவுபெற்றவுடன் அனைத்து சிறுவர்களுக்கும் திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது.





SOND

# சிறுவர் திட்டம்

**சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.**

01. இம் மாதம் சிறுவர்களினூடாக அக்கரைப்பற்று 8ம் பிரிவில் ஒரு நடமாடும் நூலக சேவையும், வீரமா காளிகோவிலில் இரண்டு சிரமதான நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டது.

**SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.**

01. காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று ஆங்கில வகுப்பு பணியாளரான விஜயகுமார்,சுரேஸ்குமார் ஆகியோரினால் நடாத்தப்பட்டது.
02. காந்தி கழக சிறுவர்களினால் சேகரிக்கப்பட்ட நிதி சேகரிப்பு பணத்தின் ஊடாக 2012.01.01 ஆம் திகதி அன்று கழக அங்கத்தவரான ம.சனுஜன் என்பவருக்கு school bag ஒன்று கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.
03. காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று உளமகிழ்வூட்டும் 03 திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது.





# டெங்கு விழிப்புணர்வு

தற்போது மக்களிற்கு பரவிவரும் டெங்கு நோயினைத் தடுப்பதற்காக கடந்த 2012.01.21 ம்திகதி ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனங்காட்டுப் பிரதேசத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பணியாற்றும் PHI, பொலீஸ், இராணுவப்படைவீரர்கள் எமது அமைப்பின் செயற்படும் இளையோர்கள் உள்ளடங்களாக 13 பேரினால் டெங்கு விழிப்புணர்வு மேற் கொள்ளப்பட்டது





SOND

## தகவல் வளநிலையம்

தகவல் வளநிலையத்தின் மூலம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள் ஆகியோர் இம்மாதம் 09 தலைப்பில் 61 புத்தகங்களையும் 7 தலைப்பில் இறுவெட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.





## கலந்துரையாடல், மீள்பார்வை

### மாதாந்த மீள்பார்வை

பணியாளர்களின் திட்ட, இதர செயற்பாடுகளில் முன்னேற்றமான நடவடிக்கைகள் பற்றிய மாதாந்த மீள்பார்வை 2012.01.20 ம் திகதி எமது அலுவலகத்தில் நடை பெற்றது இதில் பணியாளர்களுடைய சமர்ப்பணம் இடம் பெற்றது.

### பணியாளர் கலந்துரையாடல்

அலுவலக செயற்பாடுகள் திட்டக் கலந்துரையாடல் 2012.01.16 ம் திகதி எமது அலுவலகத்தில் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் தலைமையில் நடாத்தப்பட்டது.





# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## திறன்களை உயர்த்துதலும், சேவைகளையும் வளங்களையும் பெறும் நிலையை மேம்படுத்தலும்

இத் திட்டத்தின் கீழ் செயற்படும் பெண்கள், விவசாய சங்கங்களின் செயற்பாடுகள் பின்வருமாறு.

*பெண்கள் சங்கம்.*

கல்லடி வேலூர் காளியம்மன் தாய்மார் சமூக அபிவிருத்தி சங்கம், ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு சக்தி தாய்மார் அபிவிருத்திச்சங்கங்களின் ஆவணங்களை பார்வையிடப்பட்டு சங்கத்தினை தற்போதுள்ள நிலையை விட சிறப்பாக இயங்குவதற்குரிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

புதிய பெண் சங்கத்தை தெரிவு செய்வதற்காக ஏறாவூர் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட 193 B பரிந்துரைக்கப்பட்டதுடன் இவர்களுக்கான அறிமுகக்கலந்துரையாடல் 01.01.2012 அன்று கிராம சேவையாளர் கபீர் தலைமையில் நடைபெற்றது.

*கமநல அமைப்பு*

இம்மாதம் கமநல அமைப்புக்களுக்கான மாதாந்தக்கலந்துரையாடல் மண்டபத்தடி கமநல நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் 26 பேர் கலந்துகொண்டனர். இதில் SOND சார்பாக கள உத்தியோகத்தர் பி.மோட்சகலா கலந்துகொண்டார்.

வாதக்கல்மடு கமநல அமைப்பில் ஒரு நிர்வாக கலந்துரையாடலும் ஒரு பொதுக்கலந்துரையாடலும் அமைப்பின் தலைவர் நா.நவரெட்ணம் தலைமையில் சிவலிங்கத்தின் வாடியில் இடம் பெற்றது

களிமடு கமநல அமைப்பில் இம்மாதம் 01.01.2012 அன்று பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு நடைபெற்றுள்ளது.

சாமந்தியாறு கமநல அமைப்பில் 08.01.2012 திகதி அமைப்பின் பொதுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது. அமைப்பின் மேட்டுப் பயிர் செய்கையினை **16.01.2012** அறுவடை செய்துள்ளனர்.

2012ம் ஆண்டு அமைப்புக்கள் எல்லாம் புதிதாக நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதால் அவர்களது தகவல் திரட்டும் பொருட்டு தகவல் சேகரிப்புப் படிவம் வழங்கப்பட்டுள்ளது.





SOND

# முன்பள்ளி பாடசாலை அபிவிருத்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட களுதாவளை ஆகிய கிராமங்களில் இளந்தாரகை, YMHA ஆகிய இரு பாலர் பாடசாலைகளும், ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராமத்தில் PEDO பாலர் பாடசாலையும், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலை நகர் கிராமத்தில் ST. Agnant பாலர் பாடசாலையுமாக 04 பாலர் பாடசாலைகள் நான்கு கிராமங்களில் சிறுவர்களுக்கு கல்வியினை வழங்கும் நோக்குடன் சிவாச்சாரிட்டி அமைப்பின் நிதியுடன் SOND நிறுவனத்தின் கண்காணிப்பில் செயற்பட்டு வருகின்றது.

இம்மாதம் 11.01.2012 அன்று முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. SOND அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் மாதாந்தக்கலந்துரையாடல்களில் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டும்.
2. மாதாந்தம் பெற்றார் கலந்துரையாடலில் அனைத்து பெற்றோர்களும், கிராம சேவகரும், சமூக நலன்விரும்பிகளும், SOND அமைப்பின் கள உத்தியோகத்தரும் கலந்துகொள்ள வேண்டும்.

## தமிழ், முஸ்லீம் சமூகத்தை ஒருங்கிணைத்தலும் விளையாட்டு மைதான புனரமைப்பும்

USAID-Dai நிதி உதவியுடன், SOND அமைப்பின் அமுலாக்கத்தில் வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட, புதுக் குடியிருப்பு விளையாட்டு மைதானம் சீரமைக்கப்பட்டு பிரதேச சபை தவிசாளர் உதயஜீவதாஸ் அவர்களிடம் 05.01.2012 அன்று கையளிக்கப்பட்டது.

Hard ball Team ற்கான இறுதி விளையாட்டு போட்டி நடாத்துவதற்கான இம்ரான், Jolly boys கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு 24.01.2012 அன்று போட்டி நடைபெற்று Jolly boys அணி வெற்றியீட்டியது. பங்குபற்றிய, வெற்றியீட்டிய அணியினர்களுக்கு பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்பட்டது.







SOND

# மரம் நடுகை

மட்டக்களப்பு திருகோணமலை நெடுஞ்சாலையில் அரசடி தொடக்கம் ஊறணி சந்திவரை வீதி நடுவே இரண்டு மின்கம்பங்களுக்கிடையே 60 மரங்கள் நடுவதற்கான குழிகள் வெட்டப்பட்டு 35 மரங்கள் நாட்டப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு, நீர் ஊற்றி பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதில் சித்திரவேம்பு, அசோக், திருக்கொன்ற மரங்கள் நடப்பட்டுள்ளது.





# தகவல் வளநிலையம்

## நூல், இறுவெட்டுப் பயன்பாட்டு விபரம்

இம் மாதம் எமது வளநிலையத்திலிருந்து 50 புத்தகங்களையும் 4 தலைப்பில் 22 இறு வெட்டுக்களையும் சிறுவர், இளையோர், ஆசிரியர், முதியோர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் விபரம் வருமாறு.

## கணணிப்பாவனை விபரம்

இம்மாதம் எமது அமைப்பினால் வழங்கப்படும் கணணி வகுப்புக்களுக்கு 16 இளையோர்களும், 81 சிறுவர்கள் இணைந்துள்ளனர். இளையோர்களுக்கான கற்றல் வகுப்புக்கள் 08, சிறுவர்களுக்கான கற்றல் வகுப்புக்கள் 08 ம் நடைபெற்றுள்ளது.

தகவல்வள நிலையத்தில் 11 சிறுவர்கள் புதிதாக அங்கத்துவத்தில் இணைந்துள்ளனர்.

## உள மகிழ்வூட்டும் திரைப்படம்

08.01.2012 அன்று சிறுவர்களுக்கான உள மகிழ்வூட்டும் திரைப்படம் “துர்க்கா, கிருஸ்ணா” கதைகள் எமது அலுவலகத்தில் காண்பிக்கப்பட்டது. இதில் 15 ஆண்களும் 9 பெண்கள் உட்பட மொத்தமாக 24 சிறுவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.



SOND

# நடாத்தப்பட்ட பயிற்சிகள்

1. புகலிடம் அமைப்பின் பணியாளர்களுக்கு திட்ட முன்மொழிவு தயாரித்தல் தொடர்பான பயிற்சி 12,13.01.2012 ஆகிய தினங்களின் **SOND** வளவாளர் திரு.ச.செந்துராசா தலைமையில் புகலிடம் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

***பணியாளர் பயிற்சிகள்.***

1. **CDF** அமைப்பின் அனுசரணையுடன் 17.01.2012 அன்று மனித உரிமைகளை பாதுகாத்தலிலும், முன்னேற்றத்திலும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு தொடர்பான பயிற்சி **Y.M.C.A** மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு எமது அமைப்பின் கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.
2. மத்திய வங்கியின் அனுசரணையுடன் ஊழியர் சேம இலாப நிதியத்தின் அங்கத்தவர்களை பதிவு செய்வதற்கான கலந்துரையாடல் 26.01.2012 அன்று தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது இதற்கு கணக்காளர் கலந்துகொண்டார்.
3. 27,28,29.01.2012ஆகிய தினங்களில் **Cristain Aid** அனுசரணையுடன உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான வலுவூட்டல் பயிற்சி நெறி **Y.M.C.A** மண்டபத்தில் நடைபெற்றது.
4. 30.01.2012 அன்று **Diakonia** அமைப்பின் **Do no Harm** பயிற்சி நெறி தம்புல்லை **Family park** ல் நடைபெற்றது. இதற்கு கள உத்தியோகத்தர் கலந்துகொண்டார்.

# விசேட செயற்பாடு

1. சூழல்பாதுகாப்பின் முக்கியத்துவம், வீதி விபத்தினைக் குறைத்தல் போன்றன தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்ட மாநகர எல்லைக்குட்பட்ட 03 பிரதான இடங்களில் விழிப்புணர்வுப் பதாதைகள் பொருத்தப்பட்டுள்ளது.

2. சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு தெளிவுபடுத்தும்முகமாக நீலாவனை, கல்லாறு, புதுக்குடியிருப்பு, செங்கலடி, வந்தாறுமுலை, கிரான் போன்ற பிரதேசங்களில் பிரதான பாதையில் அனைவரும் பார்க்கக்கூடியவாறு 8 விழிப்புணர்வுப் பதாதைக் பொருத்தப்பட்டுள்ளது.

3. கல்லடி வேலூர் பிரதேசத்தில் செயற்படும் **Youth Club** ல் **Active** ஆக முன்வந்து எமது அமைப்புடன் இணைந்து கொண்டு செயற்பாடுகளில் ஈடுபடும் 07 இளையோருக்கு **Rain Coat, T-shirt, cricket** உபகரணங்கள் என்பன எமது அமைப்பால் வழங்கப்பட்டது.

SOND

## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.